

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, விக்கிரவாண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டியை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில மகளிர் பிரச்சாரக் குழுச் செயலாளர் தேன்மொழி, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் வேம்பி ரவி, ஜெய. ரவி தரை,ஜெ.ஜெயபால், பேரூராட்சித் தலைவர் அப்துல் சலாம், ஒன்றியக் குழுத் தலைவர் சங்கீதாஅரசி ரவிதுரை,நகர செயலாளர் நயினா முகமது, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மீனா வெங்கடேசன், பேரூராட்சி துணை தலைவர் பாலாஜி, ஒன்றிய குழுத் துணை தலைவர் ஜீவிதா ரவி மற்றும் ஊராட்சி குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருச்சி தெற்கு மாவட்டம், திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் கருணாநிதி தலைமை வகித்தார், தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனோ தங்கராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், மாவட்ட நிர்வாகிகள் என்.கோவிந்தராஜன், அ.த.த. செங்குட்டுவன், மூக்கன், நகரச் செயலாளர் காயாம்பு, பேரூர் செயலாளர் தங்கவேல், தனசேகரன், சேர்மன் சத்திய கோவிந்தராஜன், மாணவரணி முத்து வெங்கடேஷ் உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

## கல்லூரி அமைய காரணமாக இருந்த சேகர்பாபு!

### முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகதான் 'நான் முதல்வன்' என்கிற ஒரு அற்புதமான திட்டம். அரசுப் பள்ளியில் படித்துவிட்டு கல்லூரிகளில் சேருகின்ற மாணவிகளுக்கு, 'புதுமைப்பெண்' என்ற திட்டத்தின் மூலம், மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இரண்டு நாட்களாக நீங்கள் பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள், தொலைக்காட்சியிலும் பார்த்திருப்பீர்கள். படிப்பதற்காகவும், வேலை பார்ப்பதற்காகவும், வெளியூர் செல்ல வேண்டும் என்றால், பெண்கள் பாதுகாப்பாக தங்கிக் கொள்ள வசதியாக இப்போது 'தோழி விடுதிகள்' என்று விடுதி ஆரம்பித்திருக்கிறோம். குடும்பத் தலைவிகளாக இருக்கின்ற உங்கள் அம்மா மற்றும் சகோதரிகளுக்கு வருகிற செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளிலிருந்து மாதந்தோறும் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அதையும் வழங்கப் போகிறோம்.

**மாணவர்கள் உயர்ந்த இடத்திற்கு வருவதே எனக்கு பெரும் மகிழ்ச்சி!**

இப்படி ஒவ்வொரு கட்டமாக பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி உதவி செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும். இன்னும் சில ஆண்டுகள் கடந்து, எங்கேயாவது ஒரு இடத்தில், ஏதாவது ஒரு சூழ்நிலையில், ஏதாவது ஒரு தருணத்தில் என்னை நீங்கள் சந்திக்கும்போது, "உயரமான பதவிகளில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆளாகி விட்டோம்" என்று பெருமையோடு சொல்லும் அளவுக்கு அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவும் எனக்கு இருக்க முடியாது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத்தான் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ட கனவுகள். அவர்கள் கண்ட கனவு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நிறைவேற்றுகிறான் என்பதில் எனக்கு பெருமை. இதைவிட பெருமை எனக்கு வந்து சேரமுடியாது.

நீங்கள் பெருமை அடைவது ஒரு பக்கம் இருந்தாலும், எனக்கு அதைவிட முக்கியம் எது என்று கேட்டால், நீங்கள் படித்து உங்கள் பெற்றோரை பெருமை அடைய வைக்கவேண்டும்! இந்த தாய்த் தமிழ்நாட்டை பெருமை அடைய வைப்பதற்கு கல்விதான்! கல்வியை யாராலும் திருடவே முடியாது. அதுதான் நிலையான சொத்து. நீங்கள் எல்லோரும் நன்றாக படியுங்கள் என்ற வேண்டுகோளை மட்டும் இந்த நேரத்தில் வைத்து, சாதிக்க முடியாத சாதனைகளை எல்லாம் நீங்கள் சாதித்துக் காட்டவேண்டும் என்ற அந்த வேண்டுகோளையும் வைத்து, இப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் தொடக்கத்தில் சொன்னதுபோல, ஒரு எனர்ஜி மட்டுமல்ல, இன்னும் பல பணிகளை ஆற்ற வேண்டும் என்ற அந்த உந்துதலையும் இந்த நிகழ்ச்சி எனக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு, ஒரு பாச உணர்வோடு, ஏற்பாடு செய்திருக்கின்ற இந்துசமய அறநிலையத் துறைக்கும், குறிப்பாக நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு எனது இதயப்பூர்வமான நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறைநன்றி கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### மேலும் கடைகள் விரிவுபடுத்தப்படுகிறது

## 500 ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விற்பனை!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஆக.2-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (31.07.2023) தலைமைச் செயலகத்தில் தக்காளி விலையேற்றம் தொடர்பாக கூட்டுறவுத்துறையின் உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பின்னர், செய்தியாளர்களை சந்தித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடுவது கணிசமாக குறைந்ததாலும், அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து குறைந்ததாலும், ஜூன் மாத இறுதியில் வெளிச்சந்தையில் தக்காளியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.100 - 120 வரை உயர்ந்தது.


முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தக்காளி விலையேற்றத்தை கட்டுக்குள் கொண்டு வர பல்வேறு நடவடிக்கைகள் கூட்டுறவுத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் படி, எனது தலைமையில் 27.06.2023 அன்று தலைமைச்செயலகத்தில் தக்காளியின் விலையேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு கூட்டுறவுத் துறையின் கீழ் சென்னையில் செயல்படும் 27 பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 2 நகரும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 28.06.2023 முதல் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.60/ என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தொடர்ந்து ஜூலை முதல் வாரத்திலும் அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளியின் வரத்து குறைவாக இருந்ததால், வெளிச்சந்தையில் தக்காளியின் விலை கட்டுக்குள் இல்லை. எனவே, மீண்டும் 03.07.2023 அன்று தலைமைச்செயலகத்தில் தக்காளியின் வெளிச்சந்தை விலையை கட்டுப்படுத்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்படி, சென்னையில் முதற்கட்ட மாக வடசென்னையில் 32 நியாயவிலைக்கடைகளிலும் மத்திய மற்றும் தென்சென்னை நியாய விலைக் கடைகளில் தலா 25 என மொத்தம் 82 நியாயவிலைக்கடைகளிலும், மாநிலத்தில் பிற பகுதிகளில் 215 நியாய விலை க்கடைகளிலும் என மொத்தம் 302 நியாய விலைக் கடைகள் மூலம் 04.07.2023 முதல் தக்காளி கிலோ ரூ.60/க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

28.06.2023 முதல் 05.07.2023 வரை சென்னையில் 15 மெட்ரிக் டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அண்டை மாநிலங்களில் பெய்த கனமழையினால் தக்காளி விளைச்சல் குறைந்ததால், தக்காளியின் வரத்து குறைந்து காணப்படுகிறது. இதனால் மீண்டும் வெளிச்சந்தையில் தக்காளியின் விலை உயர்ந்துள்ளது. இந்நிலையை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் பாதிப்படையாமல் தடுக்கும் வகையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தற்போது தமிழ்நாடு முழுவதும் தக்காளி விற்பனை 302 நியாயவிலைக்கடைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 01.08.2023 முதல் தக்காளி விற்பனையை 500 நியாயவிலைக்கடைளுக்கு நீட்டிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 15 நியாய விலைக் கடைகளிலும், சென்னை மாவட்டத்தில் 100 நியாய விலைக் கடைகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், கடலூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், தருமபுரி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், ஈரோடு மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், கரூர் மாவட்டத்தில் 10 நியாய



விலைக் கடைகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், மதுரை மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நாமக்கல் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நீலகிரி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், சேலம் மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், சிவகங்கை மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், தென்காசி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், தேனி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், திருச்சி மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், திருப்பூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திருவாரூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், வேலூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், விழுப்புரம் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், விருதுநகர் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும் என தமிழ்நாடு முழுவதும் 500 நியாய விலைக் கடைகளில் நேற்று (01.08.2023) முதல் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.60/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**விளைச்சல் குறைவே காரணம்!**

இந்த விலையேற்றத்திற்கு காரணம், விளைச்சல் குறைவு மற்றும் அண்டை மாநிலங்களில் வரத்து குறைவே ஆகும். இது ஒரு இயற்கையான விலை யேற்றமே தவிர, செயற்கையானது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தக்காளி விலையினை கட்டுக்குள் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் நா.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அழியாநிலை பகுதி, சித்தாலங்குடியிருப்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பணியாளர்களை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 31.07.2023 அன்று நேரில் சந்தித்து, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ், விண்ணப்பங்களை வழங்கியுள்ளீர்களா என்பதையும், மேலும் குறைகள் ஏதும் உள்ளதா என்பதையும் கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் எஸ்.பாலகிருஷ்ணன், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கா.அட்சயலிங்கம் - ப.கோவிந்தராசன் தலைமை!.

## கீழ்வேளூர் பேரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!.

### என்.கௌதமன் - உ.மதிவாணன் - சேலம் சுஜாதா சிறப்புரை!

நாகை. ஆக.2 -

நாகை மாவட்டடம் கீழ்வேளூர் பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் கீழ்வேளூர் கீழ வீதியில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழக செயலாளருமான கோவிந்தராசன், பேரூர் கழகச் செயலாளர் கா.அட்சயலிங்கம் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், பேரூர் துணைச் செயலாளர் ஆர். சேகர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் செல்விவீரமணி, ஒன்றியக் குழு தலைவர் வாசுகிநாகராஜன், துணை தலைவர் எஸ்.புருஷோத்தமதாஸ், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஏ.எஸ்.என்.ராஜா, கீழ்வேளூர் பேரூராட்சி தலைவர் இந்திராகாந்திசேகர், மாவட்ட பிரதிநிதி ஆர்.நடராஜன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கலை. மதன், மாவட்ட மகளிர் இணைய தள பொறுப்பாளர் இலக்கியலெட்சுமிசுதர்சன், பொறியாளர் அணி ஏ. கதிரவன், தகவல் தொழில் நுட்ப அணி பேரூர் ஒருங்கிணைப்பாளர் ப.ரமேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூர் துணைச் செயலாளர் எம்.பிரசாத் வரவேற்றார். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில பிரச்சாரக் குழு செயலாளர் சேலம்சுஜாதா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் பேரூர் கழக அவைத் தலைவர் பா.ஷாஜகான், துணைச் செயலாளர்கள் சேதுலெட்சுமிமதன், பொருளாளர் இரா.மணிமாறன், மாவட்ட பிரதிநிதகள் ரெங்கராஜ், இரா.கல்யாணசுந்தரம், ஒன்றிய பிரதிநிதிகள் ஆர்.கோபிநாத், கோ. இளங்கோவன், கோ.ராஜா, ப.இராஜகோபால், மு.வீரகணேஷ் பேரூராட்சி உறுப்பினர்கள் எஸ்.ஜ¬குனுஷாஜகான், அகல்யா ரெங்கர ராஜ், க.மகேஷ்வரன், ராசாத்தி மணிகண்டன், இலக்கிய லெட்சுமிசுதர்சன், பிரியா முருகராஜ், மீனாட்சிராஜகோபால், ராதிகாராஜா மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். முடிவில் பேரூராட்சி துணைத் தலைவர் சந்துரு (எ) சந்திரசேகர் நன்றி கூறினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மரக்காணத்தில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா கவியரங்க நிகழ்ச்சியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் தயாளன், பழனி, ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொ. தனசேகரன்

**ஆகஸ்ட் 2 (2015)**



**தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, வேளச்சேரி பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டில் வேளச்சேரி கிளைக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்த இவர், தாமஸ்மலை ஒன்றிய பிரதிநிதி, வேளச்சேரி வட்டச் செயலாளர், வேளச்சேரி பகுதிச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றினார்.**

**1996–ல் சென்னை மாநகராட்சி 153–வது வார்டில் கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களை நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**